நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# 2018

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

## தரம் : இடைநிலை - கீழ்ப்பிரிவு (ஆண்டு 5, 6)

## Level : Intermediate - Lower (Year 5 & 6)

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)

Time Given : 60 Minutes (Including 10 minutes of reading time)

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :

மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.

(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

June 2018

**கீழே தரப்பட்ட படங்களை உபயோகித்து 1 முதல் 5 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

1. கலைவிழாவில் மாணவர்கள் ____________ பாடுகிறார்கள்.



(a) நாடகம் (b) நாட்டியம்

(c) பாட்டு (d) நடிப்பு

2. ஓட்டப்பந்தயத்தில் விளையாட்டு வீரர்கள் ____________



(a) ஓடுகிறது (b) ஓடுகிறார்கள்

(c) ஓடுவான் (d) ஓடுகிறான்

3. ____________ பாடம் படிப்பிக்கின்றார்.



(a) எழுத்தாளர் (b) மாலுமி

(c) விஞ்ஞானி (d) ஆசிரியர்

4. மருத்துவர் ________ பரிசோதிக்கிறார்.



(a) நோயாளியை (b) வயோதிபரை

(c) மழலையை (d) பாதசாரியை

5. தீயணைப்பு வீரர்கள் நெருப்பை ________



(a) மூட்டுகின்றனர். (b) அணைக்கின்றனர்.

(c) அழிக்கின்றனர். (d) எரிக்கின்றனர்.

**பின்வரும் 6 முதல் 7 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள வசனத்தில் கோடிட்ட இடத்தில் பொருந்தும் சரியான அடுக்குத்தொடரை தெரிவு செய்க.**

6. மக்கள் ________ வந்து சேர்ந்தனர்.

(a) கத்தை கத்தையாய் (b) கூட்டம் கூட்டமாய்

(c) மந்தை மந்தையாய் (d) மூட்டை மூட்டையாய்

7. பூக்கள் ________ மலர்ந்தன.

(a) குவியல் குவியலாய் (b) கொத்து கொத்தாக

(c) மந்தை மந்தையாய் (d) மூட்டை மூட்டையாய்

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 8 முதல் 12 வரையுள்ள கோடிட்ட இடங்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லை, கீழே தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து தெரிவு செய்து பூரணப்படுத்துக.**

**இராமாயணம்**

இராமாயணம் 8 ______ எழுதப்பட்ட ஒரு பழம்பெரும் காவியம் ஆகும். அது 9______ கதையைக் கூறும் காவியம். காவியம் என்பது 10______ எழுதப்பட்ட கதை நூல். 11______ கம்பர் இராமாயணத்தை தமிழில் எழுதினார். ஆகையால் அது 12______ என்று பெயர் பெற்றது.

(a) பாடல்களால் (b) இராமனின் (c) வடமொழியில்
(d) கவிச்சக்கரவர்த்தி (e) கம்பராமாயணம்

**பின்வரும் 13 முதல் 15 வரையிலான வினாக்களுக்கு பொருந்தும் எழுத்துப் பிழையற்ற சரியான சொல்லை தெரிவு செய்க.**

13. மாணவி______ பக்கமாக புத்தகத்தைப் படித்தாள்.
(a) ஒவ்வொரு (b) ஒறுஒறு (c) ஓவொரு (d) ஒவ்வோறு

14. மாணவர்கள் ______ பூசினார்கள்
(a) வன்னாம் (b) வண்ணம் (c) வர்ணம் (d) வண்ணம்

15. கோயில்களில் ______ சிறந்து விளங்குகின்றது
(a) சிற்பக்கலை (b) சிர்பக்கலை (c) சிற்பக்களை (d) சிற்பக்கழை

**பின்வரும் 16 முதல் 18 வரையிலான வினாக்களுக்குச் சரியான உறவுமுறையைத் தெரிவு செய்க.**

16. மாமா மாமியின் மகன் எமக்கு என்ன உறவு?
(a) மச்சான் (b) மச்சாள் (c) சித்தப்பா (d) சித்தி

17. சித்தப்பாவின் மகன் எமக்கு என்ன உறவு?
(a) மச்சான் (b) மச்சாள் (c) சகோதரி (d) சகோதரன்

18. அம்மாவின் அக்காவை எப்படி அழைப்போம்?
(a) பெரியம்மா (b) அத்தை (c) பூட்டி (d) அக்கா

**பின்வரும் 19 முதல் 21 வரையிலான ஒவ்வொரு வினாக்களிலும் வேறுபடும் சொல்லை தெரிவு செய்க.**

19. (a) கம்பர் (b) வள்ளுவர் (c) எல்லாளன் (d) இளங்கோ அடிகள்

20. (a) கிளித்தட்டு (b) கபடி (c) ஜல்லிக்கட்டு (d) துடுப்பாட்டம்

21. (a) பூனை (b) நாய் (c) சிங்கம் (d) ஆடு

**பின்வரும் 22 முதல் 25 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள வசனத்தில் கோடிட்ட சொல்லிற்கு பொருத்தமான எதிர்ச்சொல்லை தெரிவு செய்க.**

22. மழை வெள்ளம் **<u>பள்ளத்தில்</u>** தேங்கியது.
(a) வெளியில் (b) மேட்டில் (c) காட்டில் (d) உயரத்தில்

23. பணமில்லாத **<u>வறியவர்கள்</u>** துன்பப்படுகின்றனர்.
(a) செல்வந்தர்கள் (b) சோம்பேறிகள்
(c) சுறுசுறுப்பானவர்கள் (d) நல்லவர்கள்

24. "**<u>இளமையில்</u>** கல்வி சிலையில் எழுத்து"
(a) கருமையில் (b) முதுமையில் (c) சிறுவயதில் (d) குழந்தையில்

25. **<u>செயற்கைப்</u>** பசளை (உரம்) சூழலுக்கு கேடானது.
(a) நம்பிக்கை (b) செயற்கை (c) விவசாயம் (d) இயற்கை

**கீழே தரப்பட்டுள்ள 26 முதல் 30 வரையிலான சொற்களைச் சேர்த்து எழுதுக.**

26. கருமை + பலகை = ______

27. புத்தகம் + பை = ______

28. மரம் + வீடு = ______

29. பால் + குடம் = ______

30. பல் + சிகிச்சை = ______

**பின்வரும் 31 முதல் 35 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள வசனத்தில் கோடிட்ட சொல்லிற்குப் பொருத்தமான ஒத்தகருத்துள்ள சொல்லை தெரிவு செய்க.**

31. ஒவ்வொரு பூக்களும் ஒவ்வொரு அழகு.
   (a) வாக்கு (b) வல்லமை (c) எழில் (d) சோர்வு

32. கலைவிழாவில் மக்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள்.
   (a) சந்தோசம் (b) கவலை (c) துன்பம் (d) கோபம்

33. மகளிர் சங்கத்திற்கு நிதி உதவி தேவை
   (a) நிதானம் (b) நீதி (c) பணம் (d) தீர்ப்பு

34. மாதா பிதா குரு தெய்வம்
   (a) தாய் (b) ஆசிரியர் (c) தந்தை (d) கடவுள்

35. காவியம் என்பது பாடல்களால் எழுதப்பட்ட கதை நூல்.
   (a) புத்தகம் (b) கதை (c) படம் (d) பாடம்

**கீழே தரப்பட்டுள்ள 36 முதல் 38 வரையிலான வினாக்களிலுள்ள பழமொழிகளின் சரியான வசனத்தை தெரிவு செய்க.**

36 .
   (a) தூற்றிக்கொள் காற்றுள்ள போதே
   (b) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
   (c) தூற்றிக்கொள் போதே காற்றுள்ள
   (d) போதே காற்றுள்ள தூற்றிக்கொள்

37.
   (a) சிரசே பிரதானம் எண்சாண் உடம்பிற்கு
   (b) சிரசே எண்சாண் உடம்பிற்கு பிரதானம்
   (c) எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்
   (d) எண்சாண் சிரசே உடம்பிற்கு பிரதானம்

38.
   (a) ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
   (b) பட்டால் ஒன்று உண்டு வாழ்வு
   (c) உண்டு ஒன்று பட்டால் வாழ்வு
   (d) ஒன்று உண்டு வாழ்வு பட்டால்

**கீழே தரப்பட்டுள்ள 39 முதல் 44 வரையிலான வினாக்களுக்கு பாடலை வாசித்து பொருத்தமான விடையை தெரிவு செய்க.**



சிங்கத்தின் தோட்டத்திலே
சிக்கி விட்டது எங்கள் பட்டம்
தொங்குமதை எடுத்துவர
தூரப் பறக்கும் புறா வாரீர்!



சிறகிரண்டும் சிக்கிக் கொண்டார்
தூரப் பறக்கும் புறாவாரும்
சிநேகிதரே குரங்காரே
மறைவாக எடுத்துவர
மாட்டீரோ மரந்தாவி!
சிங்கத்தின் தோட்டத்திலே
சிக்கி விட்டது எங்கள் பட்டம்
தொங்குமதை எடுத்துவர
தூரப் பறக்கும் புறா வாரீர்!



சிறகிரண்டும் சிக்கிக் கொண்டார்
தூரப் பறக்கும் புறாவாரும்
சிநேகிதரும் குரங்காரும்
அறுகின்ற கயிற்றிலேறி
அந்தரத்தில் தொங்குகிறார்
நெடுங்கழுத்துச் சிவிங்கியாரே
நின்றுதவி செய்யீரோ?

39. பட்டம் எங்கே சிக்கிக் கொண்டது?
(a) தோட்டத்தில் (b) சிங்கத்திடம் (c) குரங்கிடம் (d) ஒட்டகச்சிவிங்கியிடம்

40. சிறகு இரண்டும் சிக்கிக் கொண்டது எது?
(a) பட்டம் (b) சிங்கம் (c) குரங்கு (d) புறா

41. நெடுங்கழுத்துப் பிராணி எது?
(a) ஒட்டகச்சிவிங்கி (b) சிங்கம் (c) குரங்கு (d) புறா

42. இப்பாடலில் வரும் பறவை எது?
(a) கிளி (b) புறா (c) கழுகு (d) மயில்

43. இப்பாடலில் வரும் அந்தரத்தில் தொங்குகின்றவர் யார்?
(a) ஒட்டகம் (b) சிங்கம் (c) குரங்கு (d) புறா

44. "நண்பன்" என்பதன் ஒத்தசொல் என்ன?
(a) எதிரி (b) சிநேகிதன் (c) நண்பி (d) சகோதரன்

**கீழே தரப்பட்டுள்ள 45 முதல் 46 வரையிலான வினாக்களுக்கு எழுவாய், பயனிலை, செயப்படுப்பொருள் சரியாக அமைந்திருக்கும் வசனத்தை தெரிவு செய்க.**

45.
(a) படித்தான் கண்ணன் புத்தகத்தை
(b) புத்தகத்தை படித்தான் கண்ணன்
(c) கண்ணன் படித்தான் புத்தகத்தை
(d) கண்ணன் புத்தகத்தை படித்தான்

46.
(a) அம்மா வாகனத்தை வேகமாக செலுத்தினார்
(b) வாகனத்தை அம்மா வேகமாக செலுத்தினார்
(c) செலுத்தினார் அம்மா வாகனத்தை வேகமாக
(d) வேகமாக அம்மா வாகனத்தை செலுத்தினார்

**கீழே தரப்பட்டுள்ள 47 முதல் 50 வரையிலான புதிர் வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

47. இரண்டு தந்திக் கம்பங்களுக்கிடையிலான கம்பியில் எட்டு குருவிகள் அமர்ந்திருக்கின்றன. அவற்றில் மூன்று குருவிகள் பறந்து சென்றது. ஒரு குருவி மீண்டும் வந்து அமர்ந்து கொண்டது. மொத்தம் எத்தனை குருவிகள் தற்பொழுது அமர்ந்துள்ளன?
(a) ஐந்து (b) எட்டு (c) ஆறு (d) மூன்று

48. ஒரு வரிசையில் ஒரு எறும்புக்கு முன்னால் இரண்டு எறும்புகளும் பின்னால் இரண்டு எறும்புகளும் செல்கின்றன. வரிசையில் மொத்தம் எத்தனை எறும்புகள் செல்கின்றன?
(a) எட்டு (b) மூன்று (c) ஆறு (d) ஐந்து

49. அவனுக்கு வீடு. குயிலுக்கு கூடு, எதற்கு வலை. அது என்ன?
(a) ஈக்கு (b) சிலந்திக்கு (c) மீனுக்கு (d) நுளம்புக்கு

50. உயரப் பறப்பவனுக்கு வால் உண்டு. கால் இல்லை. அது என்ன?
(a) பட்டம் (b) பறவை (c) ஈ (d) நிலா

51. **உங்களுக்குத் தெரிந்த ஏதேனும் ஒரு தமிழர் திருநாளைப் பற்றி 5 வசனங்கள் எழுதுக.**
(உதாரணம் : தமிழ்ப்புத்தாண்டு, தைப்பொங்கல், தீபாவளி)

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2018